மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

சுற்றுலாத் தலம்

***7082—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, அய்யனார்கோயில் நீர்வீழ்ச்சிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தொகுதியில், அய்யனார்கோயில் நீர்வீழ்ச்சிப் பகுதியில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவதாக இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்படவில்லை. அப்படி கருத்துரு பெறக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கிணங்க அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கடந்த நிதியாண்டில் மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு பெறப்பட்டு, விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் பகுதியில், பக்தர்கள் ஓய்வு மண்டபம், கழிவறை வசதி, குடிநீர் வசதிகள் அமைப்பதற்காக 20 இலட்சம் ரூபாயும், திருத்தங்கல் அருள்மிகு நின்ற நாராயணபெருமாள் கோயில் பகுதியில் பக்தர்கள் ஓய்வு மண்டபம், அடிப்படை வசதிகள் செய்வதற்காக 20 இலட்சம் ரூபாயும், ரமண மகரிஷி பிறந்த திருச்சுழி கிராமத்தில், அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக 24.78 இலட்சம் ரூபாயும், அதைப்போல ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் உள்ள திருவண்ணாமலை திருக்கோயில், தென்திருப்பதி

2012 மார்ச் 30]

என்று அழைக்கக்கூடிய அந்தப் பகுதியில் கிரிவலப் பாதையை அமைப்பதற்காக 3 கி.மீ. வரையிலே சாலையை மேம்படுத்துவதற்காக, ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாயும் இதுவரை கடந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், அந்தப் பணிகள் துவக்கப்படவுள்ள சூழ்நிலை உள்ளது என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

முற்பகல் 10—50

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், நல்லமநாய்க்கன்பட்டி என்ற குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராகவும், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராகவும், மாவட்ட இலக்கிய அணிச் செயலாளராகவும் கழகப் பணியாற்றிட வாய்ப்பளித்து, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு இதய தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

ராஜபாளையம் தொகுதியிலுள்ள அய்யனார்கோயில் நீர்வீழ்ச்சி என்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. பல உயிர் காக்கும் மூலிகைகள் இந்த மலையினுடைய அடிவாரத்தில் உள்ளன. சிறப்புமிக்க மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள கொடிமரம் இந்த அய்யனார்கோயில் பகுதியிலிருந்துதான் எடுத்துச் செல்லப்பட்டது என்பது வரலாறு. இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடம், சாம்பல் நிற அணிலின் சரணாலயமாக உள்ளது. இந்தப் பகுதியில் அரிய வகை விலங்கினங்கள் உள்ளன. ராஜபாளையம் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலிருந்து தினந்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்த இடத்திற்கு வந்து செல்கின்றார்கள். வார இறுதி நாட்களிலும், குற்றால சீசன்,

ஐயப்பன்கோயில் சீசன் போன்ற காலங்களில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இந்த நீர்வீழ்ச்சிக்கு வருகிறார்கள். எந்தவித அடிப்படை வசதியும் இல்லாததால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எதைக் கேட்டாலும் கொடுக்கக்கூடிய அட்சயபாத்திரமாக விளங்கும், அள்ளித் தருகின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு, ராஜபாளையம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அய்யனார்கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கிணங்க, நேரடியாகச் சென்று ஆய்வு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இந்த நிதியாண்டில் அம்மா அவர்களுடைய அனுமதியோடு அடிப்படை வசதிகளும், சுற்றுலாப் பயணிகளாக வரக்கூடியவர்களுக்கான வசதியும் செய்து தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

ஓட்டுநர்கள்

***4620—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீண்ட தூர பேருந்துகளில் இரண்டு ஓட்டுநர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,